உ

கணபதி துணை.

# முத்தலநாயக
# மும்மணிக் கோவை.

இது

திருக்கடம்பந்துறைத் திருப்பணிசெய்துவரும்

தேவிகோட்டை

பமு. அ. வேங்கடாசலச் செட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி

ஸ்ரீவன்றொண்டரவர்கள் மாணாக்கருளொருவராகிய

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

தேவகோட்டை

எஸ்டேட் பிரஸில்

அச்சிடப்பட்டது.

1920.

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

## தேவிகோட்டை
## வெ. ஆ. தி. மா. சிதம்பரச்செட்டியாரவர்கள்
## இயற்றியது.

---

### நேரிசை ஆசிரியப்பா.

பூமக ளகலாக் காமரு வளத்தாற்
சேணாட் டினுமுயர் சோணாட் டமரு
மெத்தலத் தினுநீ டுத்தமோத் தமமென
நாவிரி பாவிரி பூவிரி காவிரித்
தடம்பொலிந் துயர்திருக் கடம்பந் துறையி
னினியசொல் லறிவு நனிமிகு பூருவ
புண்ணிய வசத்தா னண்ணுறு சிவார்ச்சனை
தேர்ந்த சைவசித் தாந்தநூ லுணர்ச்சி
யுந்நத மகாசிவ சிந்த தாரணம்
விழுப்பந் தரூஉ மொழுக்க மாதிய
மாமை சால்குரு சாமி முதலியார்
வயிரமா ணிக்கமுத் துயரிய மூன்றை

யொன்றன்றி றொன்று மன்றவே நிரீஇ
யேவரும் வியப்பக் கோவைசெய் தாலென
முறைமுறை மூன்னூற் றுறையணி நிறைபாங்
காசிரி யப்பா மாசிரி நேரிசை
வெண்பாக் கலித்துறை பண்பாச் சமைத்து
மும்மணிக் கோவை நன்மைப் பெயர்வைத்
துலகுப யோகமா யிலகுறப்
பாடியீ கெனத்தனை நாடிவேண் டினவே. (2)

## நேரிசை வெண்பா.

தேவைநகர் மீதெமது திண்ணனூர் வம்மிசத்தோ
*னாவசியந் தேர்வேங்க டாசலப்பேர்—மாவசிய
னச்சிட் டுபயோக மாப்படிக்குப் புத்தகமா
யிச்சகத் தார்க்கிய வே. (3)

## கலித் துறை.

வித்துவசூடா மணிசொக்கலிங்கவியன்பெயரோன்
சுத்தன்சிவபூசகனெண்கடம்பந்துறைமணிவெற்
பத்தகுமீங்கோய்மலையென்றுலகமெலாம்பரசு
முத்தலநாயக மும்மணிக்கோவை மொழிந்தனனே (3)

* ஆவசியம்—வேண்டத்தக்கது.

தேவிகோட்டை

பழ. அ. வேங்கடாசலச்செட்டியாரவர்கள்

இயற்றியது.

---

காராருஞ் சோலைக் கடம்பந் துறைமுதலாச்
சீராரு முத்தலைமா தேவருக்கு—நாராரு
மும்மணிக் கோவை மொழிந்தான்றிட முறவே
பன்மணிக் கோவையென வாய்ந்து.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்கவெனுஞ் சொற்கிலக்காய் நிற்கின்றோன்—பற்கன்றண்
மாசிரியப் பூசிக்கும் வண்காரைச் சொக்கலிங்க
தேசிகனெஞ் சீலனாந் தே

வமலநின் னுடனச் சமலரை யொருங்குவைத்
தெண்ணுபு பகுதிக் கண்ணுயிர்ப் பகுதிக
ளடங்கிநின் றிறைஞ்சற் கிடங்கொடுத் தாங்கவ்
கௌவுப சாரிக மாயெனு மவுரையுந
திவள்பர மெனநீ நவின்மறை யதனுள்
விளக்கிணை யணைய கொளற்கரு நலமெலா
மறந்தவர் புரிந்த மறப்புகல் வதற்கு
நடுங்குமென் னுள்ளங் கொடுங்குண வயத்தராய்
நானே பிரம நானே பிரமமென்
றுறு இகன்றமர் மேனு ளியற்றவும்
வெகுளா தவர்புரி யிகலோய்ந் தடங்கிய
நாப்பணின் றிலங்கிணை மீப்பெருஞ் சோதியா
யது † கண் டடங்கா தவரகம் பரமெனு
முதுபெரும் பாதக முன்னின் றுய்த்தலி
னிழிதரு விலங்கும் * பழிதருபுள்ளுமாய்ப்
பாதல மேழினுங் கீழ்சொற் கழிபதம்
போதுறு புனைமுடி யெல்லாப் பொருண்முடி
வென்றருஞ் சுருதிசொ னின்றுணை யடிமுடி
தூரீஇப்பல் லூழிக ளோரீஇப்புலம் பெய்தி
யிளைத்தல மந்தகம் விளைத்தபா தகநினைஇ
நடுநடு நடுங்கிநின் னடிமலர் வழுத்துமவ்
வரிக்கு மசத்தியம் விரிக்கு மயற்கு

---

† கண்டும் என்னும் உம்மை தொக்கது. * தன்னைச் சுமக்கும் புள்ளுருவன் தனக்குவந்ததே ஈண்டுப்பழி யென்க.

முன்னிலை தெருட்டுபு நன்னிலை யருளினை
நின்னருட் பெருக்கினை யென்னென் றுரைப்ப
தடியே னறிவிலி கடிவினை பலபுரி
கொடியே னெனினுமப் படியிலாப் பாதக
மாயகான் பரமெனும் வாயுரை கனவினு
மேயில னுரைக்குநர் தாயினு மினியரே
யாயினுந் தெவ்வரென் றேயுளங் கொள்வனின்
னருட்பா லொன்றறி விருப்பா யேற்றதன்
பொருட்பாங் குணர்ந்தருந் தெருட்பே ரின்பினை
முள்ளிச் செடிக்கு மள்ளிக் கொடுத்தருள்
வள்ளற் றலைவனை யெள்ளுற் றெருதுக்குபு
நாம்பர மென்பர்பா னண்ணு தேயென்
றருடிரு வாக்கென் சிரமுறப் புனைந்தனன்
மாயா வாதப் பேய்பிடித் தாட்டலி
னேயா துலைந்து மாயா நிற்குந்
தீயவர் பாங்கருஞ் செல்கில னெந்தாய்
மேயவப் பெருநல னேயலான் மேனு
நின்னடித் தொண்டர் பொன்னடிக் கமலஞ்
சென்னியிற் கொண்டவரின்னருட் குரியருற்
றேவல் புரிந்துநின் சேவடிப் பூசனை
யாவதென் றியற்றி யோவற வழுத்துவேற்
கருள்வதொன் றுள்ளதப் பொருள்பிறி தல்லநின்
னிளையசே யாய வளநிறை புகலிமன்
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்

ஞால வாயி லுறையுமெம் மாதியென்
றியம்பியாங் கமணிரு ளிரித்துநின் பெரும்புகழ்
வயங்கொளி விளக்கினை நயங்கொளு மச்செய
றானே புரிந்திடுந் தன்னிக ராற்றலுற்
றோனே யாயு முலகெலா முணர்ந்துகொண்
டிதந்தரு சருவ சுதந்திர பதிநின்
பதந்தொழூஉ வேண்டியெவ் விதந்தரு பயன்களும்
பெற்றுவாழ் கென்றுளத் துற்றபே ரருளினாற்
சொற்றருள் வாய்மையே தெற்றெனக் கொண்டுனை
வேண்டுவ தியாதெனிற் காண்டகு முலகிடை
யாண்டவ னீநின் னடிமையா மென்றுனைப்
போற்றிவாழ் நெறிக்கிடை யூற்றினை விளைத்திங்
காற்றொணாத் துயர்செய் தகிலமும் பரந்து
செந்நெறி வேட்டோர்க் கிந்நெறி யிலதுவி
னன்னிலை யளிக்கு மெய்ந்நெறி யென்றிர்க்
தாழ்நர குய்க்கு மகம்பிர மக்கோள்
பாழ்பட நின்புகழ் வாழ்வுறப் புரிதலே
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தார்த்தென்
றருள்வா சகம்விலக் கிருண்மா சுறுதீ
நெறியா தலினிதை யறவே யொடுங்களைந்
துன்புகழ் விளக்கு மன்பெரு நலனிஃ
தின்புற வருளுத லின்பா மேமுற்
றுணர்ந்தநின் பாலிவ் வுலகுநாம் பரமெனப்

புணர்ந்தபாழ்ங் குழிவீழ் புன்கணுற் றுமையி
னிரந்துவேண்டினன்மிகையென் றுளங்கொளாதவ்
வார்த்தைதீர்ந் தின்புற வருடியெம் பெரும
வுலகெலா மார்த்தைதீர்ந் துயவருள் காவிரி
யிலகநேர் வடபா லிதற்கணி த்தாகத்
தென்பால் வடாது திசாபி முகத்தமர்ந்
தின்பார் தருமுற் றிலாமுலை யுமையுட
னினிதுவீற் றிருந்தரு ளெந்தாய்
கனிதரு கருணைக் கடப்பவ னேசனே. (க)

கடம்பந் துறையினின்முக் கண்ணமல னென்று
மிடம்பந் துறைகை பிறைவி—யுடன்பந்
தனையகன்று நாமுய்யச் சார்கின்றான் வம்மின்
வினையகன்று வீடுவிழை வீர். (உ)

வீடரு டாதா சிவனன் றிலையென வேதமெல்லா
மாடவி ஞன்முத்தி காமிக டாமுத்த ராபிமுகங் [ப்பங்
கூடுற நோற்றடை கென்றோர்த் தருள்குணங் கொல்கட
காடனவ் வாசை முகனு யமர்ந்தருள் காரணமே. (ங)

## இரத்தினகிரி.

கார்மல மொருவருஞ் சார்நல னிலாமையோன்
றோவறி வொருங்கே வீவுற மறைத்திடுந்
தன்னையுங் காட்டா தின்னல்செய் பெருவலி
யுடையதவ் வெறுழ்வலி யடையவு மழித்துத்

தரும்பே றுனிவிழைஇ வரும்பே றுலகர்சா
ரிரும்பான்மை தேற்றுஞ் சுரும்பார் குழலின
ளெண்ணுட் பிறையையிக் கண்ணே யேற்றக்
குறைவின றிருக்கென நிறுவித்தன் னுணே
தெளிதர விளக்கியாங் களிதிரு வெண்ணீற்
றொளிதிசை பரப்பிக் கிளர்திரு நுதலின
ணம்புருக் குழைவிற் கின்புளங் குழைதலே
யன்றி யெத்துணை வன்றிற லோர்களுங்
குனியவு முளங்கொளாத் தனிமுதற் பரமனே
நீகொலோ விற்குனித் தேகுவ தெனமுனீஇச்
சேமவில் லோடுமக் காமன்விற் பறித்தன்
றிணையுற வைத்தாங் கணை திருப் புருவின
டிருவுளத் தடநிறைஇப் பெருகருள் கருணைகள்
பக்குவா பக்குவந் தக்கபல் லுயிர்கட்
கருளிரு மதகெனு மிருதிரு விழியின
டனதெழிற் சாயைபோன் மெனுமயில் சாம்புறு
மாபுரி காம ரூபியை யிருகண்
ணிடைக்கொண் டெவனப் புடைத்திரு நாசியா
டாயர்தா நுகர்பொருள் சேயர்வாய்க் கொடுத்துட
னேயமிக் கவர்தரத் தூயமு தென்றதை
யுட்கொளு முலகவ ழக்கமீ தாமெனப்
பொற்கிணைத் தருளமு தக்கழி சுவையுணு
வைத்திருத் தோடுடை மணிவளத் தமைத்திளஞ்
சேய்தா நுகர்தருஞ் செவித்திருச் செவியின

ளாவணி தருபா னிருசெவி பருகமா
துரியனா ரமுதெழீஇ வருதிரு வாயின
ளியலொளி * வீடிகைச் செயலொளி யெய்திமா
துளைவிடை நிரைத்தென வொளிர்திரு மூரலாள்
சிவருக் கருள்கமா தேவவென் றடனிருந்
தோவற வுரைதிரு நாவினள் சிவர்செங்
காமலர் குவிந்து மிருதய வதனமேத்
திரமலர் விரிந்தும் பெருமகிழ் வுறப்புரி
யொருமதி யிதுவெனுந் திருமுக மதியின
டேவர் மாதர் யாவரும் பூண்ட
நாளுடை மங்கலம் போலா தாளுடை
யீச னித்திய னிறைவன் றிருப்பூட்
கிலப்பிலாத் தருணமங் கலத்திருக் களத்தின
ளண்டப் பகுதிமுற் றுற்றிடின் றளித்தனேர்
கண்டெப் புவனமுங் கைதொழு துய்கெனத்
தனிச்சிவ ராச தானியா மதுரை
யினிற்றனி யரசியா யினிதிருந் தகிலமு
மொருவறப்பொறுத்துநின் றருடிருப் புயத்தினள்
குழைபா லியற்கைப் பெருமலை குழைத்த
மழுவார் கரத்தன் றழன்மே னியைத்தனி
திளைத்துடன் குழைத்த வளைத்திருக் கரத்தின
ளுலகெலா முயுநெறி நிலவுறச் செய்வா
யலகிலாத் தமிழ்மறை மலர்தா வுதவும்

* வீடிகை—தம்பலம்.

ப்ராபா ஞானம்'விராவீ நிறையமு
திருகட மெனத்திகழ் தருதிரு முலையினள்
சாமச ரம்மெனு மிருவகை யுரோம
நிரைபு மொருமல ரிருமலர் மும்மலர்
வகையும் மடியின் றொகையு முணர்த்தியாங்
ககிலசீ வரையுந் தகவுறத் தன்னுள்வைத்
துற்றிருந் தருடிருச் சிற்றுத ரத்தின
ளெழிற்பெருங் கடற்றிகழ் சுழித்திரு வுந்தியாண்
மலர்ந்துங் குவிந்து முலர்ந்துங் குணந்திரீஇ
மற்றைநீர் நிலைகளி னூற்றதா மரைமுகி
ழெனப்படா தனைய வனப்புநீர் நிலையிற்
பேரரும் பிரண்டுகொண் டேர்கொடி யொன்றென்
றுரைதிரு நகிப்பினள் புரிபு வீரர்தம்
பூமித்தே ரன்றிதோர் சேமத்தே ரொன்றெனத்
தருதிரு வல்குலாள் பகருமத் தேர்க்கனி
செயவரு கதலியி னியைதிருக் குறங்கினள்
வெருவுதல் கால்கவைத் தொருவுத லாதிய
மருவுறு தசைவற் றொருநிலை யாயம்
மாதர்நீர் நிலையுறு மேதகு மிருகுளிர்
மானு பிணைத்திருச் சானுவி னன்பய
முற்றெளித் தொடங்கி வற்றுறு பயத்திடை
விடாதுலை வராலெனப் படாதொரு நிலைத்தாய்க்
கவினிலை நீரி லவிர்வரா லெனத்தகுங்
திருக்கணைக் காலினள் பெருக்கமிக் குளவுயிர்ப்

பகுதிக் கிருவினைத் தகுதியின் வினைப்பய
னிறைசெய் தளிப்ப வுறைதரா செனத்திகழ்
திருப்பாட் டினையாங் கொருப்படு வார்க்கே
யருணிலை தெரித்தாங் கொருதலை யைந்துறுப்
பமையுமந் நீர்நிலைக் கமடங்க ளாமெனும்
புறத்திரு வடிவிரற் றிறத்தின ளென்றுந்
தோற்றசெங் கமலமுற் பாற்றுறு மலரொலா
மடைக்கலம் புகுந்தாங் *கிடைக்கல மலாத்திருத்
தொண்டர்தாய்த்தொழத்தின மண்டுபேரருள்புரீஇ
விருப்பொருங் குதவுந் திருப்பெரும் பதத்தின
ளாயவண் சிவையுமை யம்பிகை யிமாசலை
நாயகி திரிபுரை தூயவள் பவானி
பகவதி புராந்தகி தகவதி வராம்புயை
சுகவதி கந்தரு முகவதி சங்கரி
நீலகந் தரியனை மேலவந் தரிபரை
பாலணம் பகியருட் சீலசுந் தரிபரி
பூரணி கயற்கணி நாரணி மனோன்மனி
யாரணி சாம்பவி காரணி பயிரவி
தேவிகங் காளியெம் மாவிக் கருந்துணை
யருட்பெருந் தலைவி திருக்கொலு வீற்றிருந்
தருளிடப் பாகன் றெருள்விடைப் பாகன்
றிருவாட் போக்கியென் றுரைபே ரிரத்தின
கிரிவாழ் முக்கட் பெருமான் மலரடி

---

* இடைக்கலம்—இடையில் வந்த பாத்திரம்.

யொருவா தேத்துது மூலப்பிலா
வருளா னந்தப் பெருவாழ் வுறற்கே. (௪)

பெருவாழ் விதுவென்றே பேணுகவாட் போக்கிப்
பெருமா னுலகருளும் பெம்மான்—றருவா
னழிதவிலாப் பேரின் பவனடியார் பாதப்
புழுதி சிரமேற் புனைந்து. (௫)

புனையிழைவண்டார்குழலுமைபாகத்தெம்புண்ணியனே
யுனையிழை யேனு முதவென் றிரங்கில னேவிலென்னூழ்
வினையிழை பாதகமுற்றும் மழித்துன் விரைமலர்த்தா
ணினை * யிழை செம்மணி வெற்பிடங் கொண்டருணின்
[மலனே. (௬)

## ஈங்கோய் மலை.

நின்மல நிட்கள நிரஞ்சன நித்திய
சின்மய விச்சுவ மன்மலர் காரண
விச்சுவ ரூப விச்சுவா தீத
விச்சுவ சேவிய விச்சுவ வந்தரி
யாமியென் பனமுத லாமிரு மிலக்கண
சாமியென் றருமறை காமிக மாதி
சிவசாத் திரமெலாந் தவமேன் மேலும்
விதந்தெடுத் தோதுஞ் சுதந்திர பரம
நின்னுடன் பிரிவொரீஇ மன்னிய வாரருட்
சத்திசி வர்க்கிரங் கித்திரு வுளம்பரீஇத்

* நினை—முதனிலை.

தன்னருண் மேனிதந் தன்முக னுக்கிநீ
யனையசீ வர்க்கருள் கெனவுட னிருந்தின்
சொற்புகன் றுய்க்கு நற்றிறன் றிருவுளங் [கைபே
கொண்டுயிர்க் கருள்வதிவ் வொண்டொடி செய்
யவளால் வந்த வாக்கமே யாவுமச்
சிவையா லலதோர் செயலெமக் கிலைநம்
முருவு மவளரு ளுருவே யல்லதூஉ
மெல்லா மவள்வடி வேயிதற் கையமின்
றுதனி னிறம்வே றுகநா முறுவதென்
மாதர்மிக் குறுமவள் சீதள மரகத
மணியொளி வடிவே நணிநா முறுதுமென்
றெணிநீ மரகத விலிங்கமே னியனு
யம்மலை யுச்சிமேற் பொன்மணிக் கோயிலின்
மன்றவீற் றிருந்தருள் கின்றனை யதனு
லிடையறு துயிர்க்கருள்கொடைப்பெருஞ்செல்வனீ
னின்னைவேண் டுவதொன் றுன்னடி யவன்யா
னினிப்பிறந் துழலாத் தனிப்பெரு வாழ்வே
அதுவெனக் கிப்பவத் தாவதன் றென்றியேல
விதுமுடி யொண்மா கதகிரி வாழ்முதால்
வேத முதலா விழுத்தகு நூலெலா
மோதல் பிறருக் குணர்த்தன்முன் னவைசெய்
சாதிப் பிறப்பினி மேதக வருளுக
வீதெற் கினிதளித் தித்தகு பிறப்பினிற்
காலமுண் டாகவே காதல்செய் துய்யுமா

பாலியந் தொட்டிரு காலமே லுறும்வரை
பொறைநல் லொழுக்க நிறைநுண் ணுணர்ச்சி
வாய்மை யடக்கந் தூய்மை வணக்க
மன்பரு ளாதிய நன்பெலா நிறைந்தார்க்
கிலனெனு மெவ்வ முறையாமை யீத
னலநிறை கல்வி கேள்வியி னாட்ட
மெண்ணுநல் லறனெலா மெண்ணியாங் கியற்றுறப்
புண்ணியப் பெரும்பொரு டண்ணிய நன்மொழி
நீதிசத் துவகுண மாதிநற் றிறனெலா
மேதக வருளியவ் வோதிளம் பருவத்தே
சதுச்சமற் காரம் விதிப்படி பெற்றுட
னான்மார்த் தார்ச்சனை யதன்மேற் பரார்த்தமன்
பான்மேற் கொடுபுரிந் தாற்றலு நீயரு
ளருமறை சிவாகம மாதிய வடநூற்
பொருளகங் கைக்கனி போற்றெளி தேற்றமு
மம்மறை வடித்தெடுத் தருடிருத் தமிழ்மறை
செம்மைமெய் கண்டசித் தாந்தநூற் றிறனெலா
மோர்ந்துகொண் டிலகெலா முணர்ந்துயயாங்க ணுஞ்
சார்ந்துநின் றிலக்கியின் பார்ந்துமேற் கொள்ளுமா
தடைப்படா வாக்கி னடைப்பெரு வன்மையுஞ்
சைவமெங் கணு நிறீஇப் பொய்புகன் மாயா
வாதமுற் களைகட் டாதரத் தோம்பலு
மெவ்வித முணர்த்தினுஞ் சைவநன் னெறிப்புகா
துய்வில்பா தகம்பினுஞ் செய்வினைக் கொடியரும்

வெரீஇப்புகுந் துய்வான் விளம்புசொல் லாற்றலுஞ்
சுவையுண வொடுக்குந் தவநிலை நெறியு
மிவைமுத லாய சிவநிய மங்களே
யிடையரு தியற்றலு முடன்முத லவற்றாற்
றடையுறு தென்றுந் திடகாத் திரமுத
லாந்துணை வலியெலாஞ் சார்ந்துநின் றாக்கலும்
பிறர்மனை யவரைப் பெற்றதா யேயெனு
முறுதியு மயலார் நிறையெழிற் பேதையர்
வலியவந் தணைப்பினு மனாநடு நடுங்கி
விலகிநின் றிதஞ்சொலி விலக்கிடுந் திண்மையு
மெச்செய னிகழினு மென்னுள நின்னடி
யிற்சலி யாம லிறுகுறத் தழீஇக்கொளு
மத்திற னழூவாச் சுத்தவத் துவித
நித்தியா னந்த நிறைபெருங் கலவியே
துய்த்துவாழ் வுறலுமே யத்தநீ யருடியால்
வியத்தகு மிவைசிறி தயர்த்துநின் றெப்போ
தாயினு மிவற்றின்வே றுயொரு பொருளினை
வேண்டிநின் றாற்றினு மாண்டத னிலேசமு
மருளா தொழிதலும் வேண்டுமிஃ தல்லதூஉ
மின்னன சிறப்பெலா மெனக்குள தென்றெழூஉ
நன்னர்முற் றொழித்து மன்னகந் தாதிநீக்
குணஞ்சிறி தெனினுமோர் கணமுமென் பாலுறா
நலனுமாங் கருடியெந் தலைவநின் னன்பர்கோள்
வாழிக வருள்புரி மாகத வல்லியோர்

பாங்கா யிருந்தருள் பரம
னீங்கோய் மலையமர்ந் திலங்குவண் சுடரே. (௭)

சுடர்மூன் றருணயனத் தோன்றல் கருணைக்
கடலே விரிந்தடங்கு கங்கைச்—சடையாய்
மரகதமன் வல்லிமண வாளாவென் பார்க்கு
வீரக*தமன் யாவும் விடும். (௮)

விடங்கனை யீங்கோய் விமலனை யாங்கணும்வேறறச்சார்ந்
துடங்கனை தேவிமரகதவல்லி யுமைகிரிசை [மறைசொல்
குடங்கனை கொங்கையைக் கொண்டருள்வானைக் குல
சடங்கனைப்பஞ்சப்பிரமனையன்றியொர்சார்பில்லையே (௯)

## கடம்பந்துறை.

சார்வருந் திறத்துச் சீர்பெறுஞ் சிருட்டி
யேர்பெற வியற்று மோர்பெருந் தலைவனு
மிப்படைப் பந்தோ பொய்ப்பவஞ் சத்தை
மெய்ப்படத் தோற்றலி னப்பவஞ் சத்தின்
வாஞ்சைநீத் துய்ந்திடற் காஞ்செய லன்றென
வோய்ஞ்சுள மிப்பவந் தேய்ஞ்சுய மதித்துன்
கயிலைவந் தையவென் செய†லதி கார
மலமொழிந் திரண்டறு நலனுற வருள்கென
வேண்டிடத் திருவுளம் பூண்டிரு வினையொப்
பிருண்மல பாகந் திருவருட் பதிவென்

* தமன்—ஈறுபோலி, † அதிகார மலம், உம்மைத் தொகை

பனமுறை நினக்குறி னனையவி டேழுறற்
கருந்தவ நியபயப் பெருந்தவம் புண்ணிய
பூமியின் மாமிகு தேமலர் கடம்பந்
துறையி லொருங்கி நிறைதவம் புரிதியாங்
குன்னுளம் வேட்டாங் கின்னருள்புரிதுமென்
றருளியப் பிரமன் பெரிதுவந் தீண்டுநீ இப்
பொன்னிதோய்ந் தருட்கடம்பின்னிழல் வீற்றிருந
தருளுநின் பொன்னடி யிருதயத் தமைத்துத்
தேவவாண் டாயிர மோவறப் பெருந்தவம்
புரிந்துநின் னருள்பெறூ இருந்துமுட் சோர்வுறூ
தருந்தவ மேலும் புரிந்திட மனத்திடங்
கொண்டுகா விரிதோய்ந் தெண்டரு கடம்பின்
மாடுற வரனுமுன் றேடுபு பல்லுகம்
விண்பறந் திளைத்துங் கண்படா தழிதமா
யுலகெலாங் கடந்து நிலவுலா நீர்மலிந்
தலகிலா விதழிமா மலர்குலா யவற்றூ
லடங்கா வடைந்தார்க் கருள்புரிந் துயர்த்த
லடங்கா *மிடைந்தா ரடக்கி யொடுக்க
லிருள்கெடுத் தொளிவிரித் திடுஞ்சிவ ஞானமு
மிருண்மல வெப்பொழித் தருண்மலர் மோக்க
தாதாவென் பார்க்கரு டாதா தானெனன்
மெய்ப்பெருந் தனித்தலை மைப்பொரு டானென
லாதிக ணோர்பல வேதுவி னெவர்க்குந்

* மிடைந்தார், இரண்டனுருபு தொக்கது.

தெருட்சியின் விளக்குந் திருச்சடை முடியு
மொருபர மான்மா ‡ வொளிர்திருச் சென்னியு
மும்மல மாதிய முத்தொகை முரண்கெடுத்
தம்மலர் பசுத்துவ மகற்றிச் சிவத்துவ
மளித்தனை ருணர்த்தாங் கவிர்திரி புண்டர
மார்ந்தொளிர் குடிலைவைப் பாந்திரு நுதனு
மலகெலாந் தொழவிரிந் திலகுமுச் சுடர்க்கு
மத்தகு மொழியருண் முத்திருக் கண்களுஞ்
செந்தமிழ் மணங்கவ ருந்திரு நாசியு
மருமறை யாவுந் தருதிரு வாயு
முந்தெழுத் தொளிர்திருத் தந்தபந் திகளு
மெய்ப்பெருஞ் சுவைகளுங் கைப்பென வெறுக்குமா
செய்தருந் தனிப்பெருந் தைவிகச் சுவையவாய்
மெய்தருஞ் சிவாகம விதமிக் கினித்தலா
லவைதனில் வைத்துச் சுவைதிரு நாவுங்
குன்றுத லாதியின் றென்றுமோ ரியல்பி
னருட்கடன் மலர்ந்தொளிர் திருத்தகு நிறைமதி
தகுமென் றுரைதிரு முகமண் டலமு
மரியயன் முதற்சுரர் பிரியுயிர் நிறுத்தற்
கொருகறை நிறுத்தி யருடிருக் கண்டமும்
விரிஞ்சன் மாலுதயந் தருந்திருப் புயங்களு
மஞ்சன்மி னென்றழைத் துஞ்சிட வரந்தரன்
மெய்யெனத் தேற்றுபு நைவுல குக்குறிற்

‡ பரமான்மா. மூர்த்திமான்.

பாற்றிநன் றுடனரு ணூற்பிருக் கரங்களு
மயனரி யுருத்திர ராதியர் யாவரும்
வியனுல கெவைகளும் விரிந்தவா றொடுங்க
வொடுக்கிநின் றெஞ்சி யொடுக்கமின் றதிநமா
யுலப்பிலா தென்று நிலைப்பொரு டாமெனல்
கண்டிடக் காட்டும் வெண்டிரு நீற்றிணைப்
பரவப் புனைந்தப் பாலொளி பவளத்
திருவொளி யுடன்கலந் தருமறை புகல்புரி
தாத்து விகபதத் தரும்பொருள் விளக்கிப்
போதமுப் புரிநூன் மேதகப் புனைந்த
இளத்தருஞ் செம்ப வளத்திரு மார்பு
மகில புவனமுந் தொகுதிரு வுதரமும்
பொன்னம் பாமுத லென்னவு மரிபிர
மாதியர்க் களித்து மேதகு நிராசையே
யெப்பொரு ளுந்தரு மெய்ப்பொரு ளெனவிளக்
கத்தகு வண்சரு மத்திரு வரையு
மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலு
மூசு வண்டறை பொய்கையும் போன்றினிதன்
ரூசு நீக்குவா ரீசநம் வாழ்வு
கண்டன கொண்டொரு வாறு விண்டிட
லன்றி யிற்றெனை லென்று மெவர்க்கு
மரியவப் பான்மை தெரிதர வருளிய
சுருதி யிலக்கணக் குரிய விலக்கியப்

பொருளாய் ஞானக் கிரியா வாய்மை
தருவடி வாய திருவடி மலரும்
பெற்றுமா வண்டம் பிறங்குபல் கோடியு
முற்றிலா முலையுமை பொற்றிருப் பாகமே
சார்புற நோக்கருட் பார்வையு மெல்லாந்
தோன்றமால் விடைமே லேன்றுவந் தருளியவ்
வயனுளங் களிப்ப நயனநீர் துளிப்பச்
செயலொழிந் தின்பப் பயனுகர்ந் திருப்ப
வவனுன் முடியினின் றிவியாம் புயபதம்
வைத்துல வாத வத்து விதச்சுக
வாழ்வுதந் தருளிய போழ்மதி நதிதிகழ்
சென்னியெந் தாய்முன் னின்னெடு முடியோன்
றினையே காண்பா னினையா வெழுந்தநாட்
காட்டா தின்றுநின் வாட்டோய் வடிவெலா
முன்னுறக் காட்டுமீ தன்னையர் சேயர்தம்
பருவ முணர்ந்துணர்த் தருதிறன் போலுமா
லாதலி னீயே யறிந்தருள் செயினலா
லீதருள் கெனயா னிரத்தலெங் கதுவு
மறிவிலாச் சிறியன் குறைதவிர்த் தருள
லின்கட னென்பது நிகழ்த்திலேன்
றென்கடம் பந்துறை திகழவாழ் முதலே. (௩0)

வாழ்முதலே நாயேன் வழித்துணையே யென்ஞான்றும்
போழ்மதியங் கண்ணிப் புனிதனே—பாழ்மயல்செய்

தாப வநத்த *மலஞ் சாய்த்தருள்வ துன்பரமே
நீப வநத்தமல னீ. (௧௧)

நீநா னெனலொரீஇச் சுத்தாத் துவித நிலையின்பமே
தானேவரப்பெறுதொண்டர்குற்றேவறலைமிசைக்கொண்
டாறு இயற்றுமவ் வாற்றலை யேனு மளித்தருளெம்
மானே கடம்பந் துறைவீற்றிருந்தருண்மாதவனே (௧௨)

## இரத்தினகிரி.

தவமிகு தவமுற் பவமெலா முழந்த
தூயநன் னெறிச்சிவ நேயருக் கல்லது
சார்தற் கரும்பெருஞ் சீர்பெற் றுள்ளது
வந்துவந் தெடுத்துவந் திந்தமா நிலத்திடு
முந்துபொன் மலைமுடி யைந்துளொன் றாயுயர்
வெண்ணிரண் டகற்சி நண்ணுமுன் றியோசனைத்
தாயு மரிதென் றசாவா துலகெலாஞ்
சூழ்ந்துந் தொழுதும் வாழ்ந்திடற் கெளிதாய்
வீழ்ந்தநா ணனிபுவி யாழ்ந்துநின் றொளிர்வது
சித்தர்கள் சிவன் முத்தர்பன் முனிவ
ரெத்தகை யோரு நித்திய வாசராய்
வாழ்பெருந் தகையின தாழ்வலி யாற்பெறு
மிந்திரன் முனிசா பந்தவிர்த் துடற்சார்
வெம்பக முழுது மம்பக மாக்கி

* தாபம் அநர்த்தம் எனப்பிரிக்க.

யுடற்கண னெனவோர் தட்பெய ரளித்த
தச்சு நாசிமுன் வைச்சமு தார்த்தி
வளர்த்துள வேம்பொன் றளப்பருஞ் சிறப்புடன்
கைக்கு மருந்தின் மெய்க்கினி தாக்குமவ்
வுடற்கண் ணையரி னுயிர்க் கண்ணயாய
கரும்பார் திருமொழிச் சுரும்பார் குழலி
யழுக்கறுத் துயிருய வழுக்குட லாதித
திழுக்கறு மின்பருள் விழுத்தக வுணர்த்தியாங்
கவடுரு முன்னிலைஇத் திவள்பெரு நலத்த
பின்னான் வாய வெல்லையில் சீர்த்திகண்
மன்னு பிரத்தின மலைவாழ் முழுமுதா
லம்மலை யுச்சிமேற் செம்மணிக் கோயிலின்
மேற்றிசை முகனாய் வீற்றிருந் தருளு நீ
யாண்டுனை யன்புடன் காண்டலே கருத்தாய்
வருவார் தென்றிசை வாயில் வழியே
வருமா வகுத்தத் திருவா யிலினேர்
வடநிழ லருட்குரு வடிவனு யமர்வது
மபின்னையா யுடன்சார்ந் தருளு மாதேவி
யத்திருக் கோயிற் கணித்தா யதன்கீழ்ப்
பின்னைபோ லமர்ந்தருள் பெற்றியுந் தூக்கிற்
றத்துவ சோபா னத்தொகை தனித்தனி
யெய்த்திளைத் தேறுநர்க் கத்தலை யின்னருட்
செங்கர நீட்டி யிங்குநம் மக்காள்
வம்மினீ ரென்றுங் கின்மொழி யருளித்

ஆக்கி யெடுத்துடன் மேக்குற வேற்றித்
தத்துவா தீதத் தனிப்பர னின்பதஞ்
சேர்க்குந் தன்செயல் யார்க்கும் புலப்படப்
புறத்தும் விளக்குதல் போலப் புவியினின்
றிம்மலைப் படிநிரை யேறியாங் கிளைக்குநர்
தம்மைநீர் வருந்தலிர் சமீப மினியென
நிம்ப நிழற்காற் றம்பெற வருளி
யாதரித் தணைத்துடன் மேதக வேற்றலு
மேறியாங் குறுமவர் தேறியின் புறுமா
நன்றுவந் தளிர்கொலோ வென்றுவந் தழைத்தலிற்
றென்முக குருபரன் புன்முறு வன்னனி
வின்மலிந் திலங்குபப் பொன்முக மலர்ந்து
போக்கொளித் தருள்சிவ தீக்கைசெய்தைந் தெழுத்
தருளியின் புறச்செலுத் தொருபெருஞ் செயலும்
விளக்கலே யன்றிக் கிளத்தவே றுளதோ
விரத்தின கிரிச விரத்தின விலிங்கத்
திருத்தரு மேனிச் சிவபரஞ் சுடரே
நீவர்க ருப்தப் காவன மேவி
புரிசெயல் யாவுமவ் வருமையோ டொன்றே
நோக்கினு முள்ளந் தீக்கனன் மெழுகா
யுருகியின் பமுதம் பருகுவர் பெரியர்—யானே
யன்பறி வொழுக்க மென்பன வாதி
நன்மையொன் றில்லா வன்மனக் கொடியே
னிற்குறித் திளகாக் கற்குறழ்கடையே—னாயினுங்

தாதையைக் கொன்று தாயைப் புணர்ந்தமா
பாதகற் கருளிநின் மேதகு மிரக்கந்
தெரித்தருள் பரமவென் றீமை நோக்கா
தருத்திமுன் னுய திருத்தகு நலனெலாங்
குறையா தளித்தருள் கூட்டுக
கறையார் களத்தெங் கருணைமா கடலே. (௧௩)

கடலுடுத்த காசினியோர் காசினிவா ராம
னுடனடுத்துப் போற்றவரு ளும்பன்—விடமடுத்த
கண்டன் மணிவெற்பைக் கண்டுதொழார் கைதலைகால்
கண்டன் * செயலிழந்த காண். (௧௪)

காண்டன்னினைவா லுருவெளித்தோற்றமுன் கண்டுமகிழ்
பூண்டன் புறத்தழூஉங் காலூற்ற மின்றிப் புலர்ந்துநனி
மீண்டுங் கவலுமிவ் வேயுறழ் தோளியை மேவுகண்டாய்
மாண்டங் கிரத்தின வெற்பீசபூங்கொன்றைமாலையனே. (௧௫)

## ஈங்கோய்.

மாலய னரிமுனோர் சாலமிக் கருந்தவம்
விதியுளி யாற்றிமேற் பதவிபெற் றனரவ
ரப்பெரும் பதங்களின் பொற்பதத் தன்புபூண்
டாற்றிய பூசனைப் பேற்றினு னீதாப்
பெற்றதும் பேரிட ருற்றபோ துன்னை

* தன்செயல்—தனித்தனிச்சென்றியையும்.

யடுத்துவந் திறைஞ்சி யிடுக்கணீத் துய்ந்திடப்
பெறலுமெஞ் ஞான்று மறவியின் றுன்னடிப்
பூசனை நாடொறு நேசனை யாதினி
தாற்றியே நின்னருட் பேற்றினை வேண்டி
வீற்றுவீற் றத்தொழி லாற்றுமவ் வாற்றல்
பெற்றிருந் துஞற்றலு மற்றுனை மறந்திடி
னத்தொழிற் றலைமையு மகன்றிடு மென்பதுந்
தெரிந்துவைத் திருந்து மருந்துனை யாயநின்
வேதசி வாகம நீதியைக் கடந்தொரோர்
காற்புரி தீச்செயன் மீப்பெரி தாகவு
மதுதிரு வுளங்கொளாக் கதுமென மாற்றியப்
பாதக மொழிந்துயு மாதக வருளுந்
தடப்பெருங் கருணை யுடைப்பர னீயென
வுலகெலா முணர்ந்த நிலையதே யடியே
னாயினுங் கடையே னாயினும் பிழைபொறுத்
தேயருள் புரிவைநீ தாயினு மினியையென்
றுன்னடி யடைந்தே னென்னவை யொன்றுந்
திருவுளங் கொளாம லருள்கவெம் பெரும
வழுக்குமெய் யீதெனக் களித்தனை யத்தொடர்
பிழுக்குறு செயலினு மிழுக்கினென் செய்கே
னதுவு நான்படற் பாலவூ ழாயினும்
பிழுக்கை வாரியும் பால்கொளும் பெற்றிபோற்
குற்றங்க ணீக்கிக் குணங்கொண் டருளுக
பிழைபுரிந் திடினுந் திருவடிப் பிழையேன்

வழுக்கிலீ ழினுநின் றிருப்பெயர் வழுத்தலே
யல்லதொன் றறியே னருள்வதுன்பரமே—யதனாற்
பெருமவென் வேட்கைமுற் றருளுகென் றிரந்திலே
னானக்கண் பாச முணராப் பரிசினை
ஞானக்கண் கொண்டே நாடுகென் றருளிய
மெய்கண்ட சுருதிக் கைகண்ட வாய்மை
நோக்கியென் ஞான நோக்கினை மூடிய
மாசிருட் படல மோசக நீயவ்
வழுக்குநோய் முற்று மற்றொளி திகழ்வா
னொழுக்குமோர் மருந்தெனு முனைத்தகக் கண்:
டென்னையே யிடையறா துற்றுநோக்கிமோ [கொண்
வருள்கவி தொன்றே யமையுமா லண்ணு
லுலகரை வருகென வலைதரு சாகையா
லினிதழைத் திம்மலைத் தனிமுதற் பரமனைக்
கண்டிகை தொழினுடன் விண்டிடும் பவமெலா
மொருவா வின்பப் பெருவாழ் வுறுவீ
ரன்னது பெறுதற் கின்னல்செய் பவஞ்சத்
தொட்டா திருத்த லுறுதியிப் பழம்போல்
விட்டோய்ந் தாய்கென விளம்பிநி தரிசனத்
துதாரணங் காட்டி யுபதேசித் தருள்
சிவகுர வன்போன் றவிர்தந் திருணி
யருக்கமண் டலந்தோய்ந் தளப்பரும்பெருமைசால்
விருக்கமுன் கொண்டு விளங்கு மரகத
மலைவீற் றிருந்தருள் வரத நாயக

மாகத வல்லி மணாள
குரகத மறையாக் கொண்டசே வகனே. (க௯)

சேவடியே பற்றிச் சிறந்தார் திருக்கூட்டத்
தாவடியேன் சார்வா னருளுதியோ—மூவடிவ
னையுமல னுமீங்கோ யண்ணலே யென்னைமறைத்
தேயுமல னுமறச்சாய்த் தின்று. (௨௰)

இன்[illegible]றன் றிடர்ப்படு வார்சார் புறுமை யெனக்களித்தா
யன்றெனுஞ் சுத்தாத் துவிதசித் தாந்த வருணெறியே
நின்றவர் கூட்டம் விடாதுறச் சேர்த்தனு நின்பாமீ
தொன்றரு ளீங்கோய் மாகத வல்லி யுமாதவனே. (௨௧)

## கடம்பந்துறை.

மாதவ னுந்திப் போதவ னுளம்வெட்
டாங்கருட் பதஞ்சிரத் தமையவைத் தருளிய
பின்னுயப் பிரமனை முன்னுற நோக்கி
யிங்கொரு தீர்த்த மங்கிமா திரத்துள
ததனைநீ சிரஞ்சேக தாரணம் புரிந்துநா
முற்றிலா முலையுட னுற்றுவிற் றிருந்துவாழ்
சிவாலயத் திருப்பணி தவா தியல் சித்திரைத்
திருவிழா நிதம்புரி தருசிவார்ச் சனைமுதற்
சிவ கிரிய மப்பல திவளுறப் புரிகென்
றருளியவ் விதமே புரிதாச செய்ததிப்

பவஞ்சங் கடந்து நிவந்தொளிர் பெரியரு
முலகுயும் பொருட்டந் நலன்முறை புரிதலே
வேண்டுமென் றுள்ளவா பூண்டுநின் றியற்றுவா
ரூணைதந் தூக்கலே யாகவு மித்திறன்
பேணிலார் சிற்சிலர் மாணுமெய்ஞ் ஞான
முற்றுங்கை வந்ததா வெற்றுரை தந்தறி
வற்றுயர் சிவார்ச்சனை யாதிசெய் யாதிகழ்ந்
துணவுமுற் செயலா லுடல்வளர்த் திருமாந்
தவ்வுள வறியமாட் டார்தமை மருட்டித்
திரிவரீண் டவர்க்குநீ புரிவதை யெவனோ—வவரே
வஞ்சித் துண்டூஉஇ மகிழன்மின் வஞ்சித்த
வெங்கு முளனொரு வன்காண்மென் றஞ்சி
யங்கங் குலேவ தறிவென் றிலக்கிய
செஞ்சொல் வினவாச் செவிடர்நீ மகவா
யெண்ணிரண் டாண்டுடனிருந் தருள்செயப்பெறும்
பெற்றியான் முழுத்துற வுற்றவெண் காடரு
மியல்பூ சனைமுத னியமமா திகளெலா
முடிந்தபின் கொல்கென மொழிந்ததுங் கேளார்
நடையறுப் பெருந்துற வுடையவா கீசத்
திருவடி களுமறைப் பொருள்வடி சுருதியி
லுண்பதன் முன்மலர் பறித்திட் டுனைதவர்
பிறந்திறந் துழன்று மறம்புரி பாதக
ரென்றருளி துமுத லொன்றுமுய்த் துணரா—ரினைய
வெஞ்சுருக் கொடிய வஞ்சகர் திறங்களை இ

மேற்கொண் டியற்றுசன் மார்க்க நித்திய
சிவார்ச்சனை யாதி சிவஙிய மங்களே
தவாதபே ரன்பிற் றளரா தினையா
துடலிறுங் காறுந் தொடர்புற வியற்றும்
பெருவாழ் வடியேற் கொருவா தருளுதி
பகவநீ வடதிசை முகவனு யமர்தலின்
முத்தியொன் றேயலாற் புத்திதா ராய்கொ
லெனப்பரா முகரா யுனைப்பரா வுதலொரீஇ
நீங்குவார் தம்மையு மீங்குநீர் வம்மின்
புத்திசித் திகண்முத லெத்தகு பேறு
நாமே தருதுநம் வாமேய் முற்றிலா
முலைபூர் வாபி முகத்தளா யமர்ந்தந்
நிலைதேற் றிடுமிது மலையா தோர்மி
னென்றங் கெவரையு நின்றண் கரமே
னீட்டி யழைத்தென நிமிர்தரு விடைக்கொடி
சேட்டிகழ்ந் தசைதிருச் செம்பொற் கோயிலின்
வீற்றிருந் தருளும்வெண் ணீற்றொளிமேனியெம்—
தத்துவங் கடந்துள முத்தரா யினுமோர் [பெரும
சிறிதரில் புரியினும் வறிதுறு துன்றுற்
றண்டனைப் படுவரென் றெண்டகு நூல்புக
லத்திற னிதரிச னத்துணர்த் துதற்கே
நின்னில்வே றுகா மன்னிளஞ் சேய்குரு
முகத்தலாற் சிவநூ லகத்துறு பொருளினை
மறைந்துகேட் பஃதவ் வறங்கடை யாமென

விளக்குவா னுமைக்குநீ கிளத்துதா ரகப்பொருண்
மறைந்துகேட் டனுமுறை திறம்பிய செயலிஃ
தாற்றுநீ முகந் தேற்றுறு கெனவது
நிர்தரத் தலமெலாஞ் சார்பொருவாமையி—னவ்வை
னீண்டுவந் தருந்தவம் பூண்டனை நாடொறு
மாசனை யுறவருள் பூசனை புரிபவத்
தேசனை யுவந்துவந் * தாசனை யிடத்தனு
மெடுத்தணைத் துச்சிமோந் தடுத்தமு கத்துவம்
விடுத்தொழிந் தாருண் மடுத்தனா னேனைய
மப்பொழு தனைய சிறபா குமாரற்
குற்றதா விளக்கினா னேதைய புரிப்பெயர்
பெற்றிட வருளியப் பிறங்குதண் கடம்பந்
துறைவீற் றிருந்தரு டைய
நறைவீற் றிருந்தசீ கண்டமா மணியே. (௧௯)

மணிகண்ட னீப வனத்தகண்டன் வானோர்
பணிகண்டன் மெய்கண்ட பன்னூ—லணிகண்ட
சைவசித் தாந்த தவர்க்கருளு † நெஞ்சேசனை
சைவசித் தாந்தவிர்ந்து நாடு. (௨௦)

நாடுவ தென்று முனையே நவில்வதுன் னாமங்களே
பாடுவ துன்புகழ் கேட்பதுன் காதை பயில்வதுதொண்
டோடுவ தின்றரு ளோங்குங் கடம்பை பொருவவிவட்
கூடுவ துன்கட ‡ னீடுவதாருட் கொள்கையன்றே. (௨௧)

---

* ஆசு—விரைவு. † நெஞ்சு அண்மைவிளி.
‡ நீடுவது—தாமசிப்பது.

## இரத்தினகிரி.

அன்றே மறைத்த தறிவை யிருண்மல
மென்றே நனிநைந் திடர்ப்படு மெளியேற்
கழுக்குட லாதிக ளளித்து மேன்மேலும்
வழுக்கிவீழ்ந் திடச்செயன் மரபுகொலோ பநீ
தனுமுத லியதால் வினைகளெனுஞ் சாவனை
நுகர்வித் தருநெறி புகவுய்த் திடற்குரித்
தாஞ்செய லென்றியேல் வாஞ்சைபற் பலவா
யேய்ந்தப னெறிகளிற் பாய்ந்திடா தீர்த்துன்
னருநெறிப் புகுமா புரிதனின் கடனே
நீயே சுதந்திர னேயேன் பரதந்
திரனெனப் புகனு லுரைபழு தன்றே
யாதலி னியெனை யாட்டுவித் தாங்கலாற்
பேதையேற் கோர்செய லேதுமின் றென்று
மாட்டுவித் தாலா ரொருவரா டாதா
ரென்றுயர் சுருதியு மன்றவவ் வாய்மையே
நின்றிலக் கிடுமாற் றென்றுதொட் டீர்த்தெனைத்
தன்வயப் படுத்தி மன்வயஞ் செய்மனத்
தின்வலி யளப்பரு நின்வலிக் கெதிர்கொ
லொருகண மேனு மொருவர் தென்னுடன்
மருவிவீற் றிருந்தருள் பெருமவென் சொல்கே
னென்னுட னிருந்தருணின்னெறுழ்வலியையோர்
தன்னமு நோக்கா தின்னல்செய் வனதேய

தன்றொழி லாக்கொளு மென்றனி வன்மன
மின்றுகா றியான்செய் * நன்றிகொன் றந்தோ
நின்னரு ணறிநின் றன்னையே பேணி
யின்னறீர்ந் துய்துமென் றுன்னிநேர் நோக்கி
யின்புறுங் காலெலை வன்புசெய் தவாவுடன்
பசியற வுண்பவ ரசைவுற வலிந்திழுத்
துணவறப் புறஞ்செலுத் திணையறு பதகர்போல்
வலிய விழுத்துப் புலனெறி புகுத்தி
நலியுமா புரிதனீ பலமுறை பார்த்தும்
வாளா விருத்திநின் றுளா மெளியேன்
மீளா தரற்றலுங் கேளாய் கொல்லோ
வெங்குருஞ் செவியுடை யங்கண நின்னைச்
சகல சீவ தயாநிதி யென்றே
நிகமவா கமமெலாம் பகர்தரு மதனா—னீயோ
வன்கண னல்லைமற் றென்கொல் பிறவெனிற்
றுன்புதுன் புற்றவர்க் கல்லது தோன்று
தாகலி னின்பமே தேகிநீ யான்படுந்
துன்புணர்ந் திலையெனச் சோறுமா லெனிலோ
சருவஞ்ஞ னீயது சாற்றவொண் ணாதினி
யென்வினைச் செயலிது வெனிலது சடமே
நின்வழி யன்றி நிகழ்வுறு தொழிந்த
பிறவு நினையலாற் பேசொணா தல்லதூஉந்
திருவுளங் கொளினி யொருவுறுப் பாதக

* நன்றி—அம்மனம் எளிய செய்தல்.

வினையு முண் டேகொலன் றனையுல களித்தரு—
கயற்கணி யினைய மயற்பெரும் பாதகற் [ளன்னை
குய்வகை யருள்வதென் னுரையென வாண்டினி
தெய்வகை யாங்கணு மிழைத்தமா பாதகந்
தளர்வுறு தலைப்பக் களைகண்வே றின்றி
வியக் கடவனை நேயத் தடுத்துநாங்
காத்தலே யன்றோ காப்பெனத் தக்க
தெனவிடை தந்தளித் தனக ளுக்கிய
தடப்பெருங் கருணை யுடைப்பா னீயே
யொடுங்கிநின் றடியேன் படுந்துய ராற்றா
மையினுரைத் தனன்பொறுத் துயநெறி காண்பா
னருளுதி காட்டுவித் தாலா ரொருவர்
காணா தாரென மாணார் செந்தமிழ்த்
தெய்வச் சுருதி மெய்வைத் திலக்கலிற்
கடுவினை புரிந்த கொடிய னாயினு
மவ்வினை மாற்றி யருள்கநின் னருண்முன்
னெவ்வினை யெனினு மிரியுமக் கணமே
யாதலின் வினைமுழு தகன்றிரண் டற்றுவாழ்
மாதரு பேரின் பேதக நுகர்ந்தாங்
கலைவற விருக்குமா வருளுதி சுரும்பார்
குழலுமை பாகந் தழுவியெஞ் ஞான்று
மிரத்தின கிரியிற் றிருந்து
கருத்தறிந் துதவுங் கருணைவா ரிதியே. (௨௨)

வாரங் கழனிகட்கும் வந்துதரி சித்தோர்க்கும்
வாரம் பணைக்கு மணிமலையே—நாரஞ்சேர்
வேணியார் பாணியார் மெய்யன்பர்க் கீதிறத்தல்
* வேணியார் வாணியா ரில். (உங)

இலம்பக வானுதல் வண்டார் குழலி யிடத்தமலை
வலம்பக வாங்குங் கராம்புயத் தாய்செம் மணிமலைய
னலம்பக வாவென் மனக்கற் குழைத்துன் னளினபதத்
தலம்பகவாகொளினன்றேயழகுநின்றண்மலர்க்கே. (உச)

## ஈங்கோய்.

மலவழுக் கறப்பெறீஇ யிலகரு ளுற்றுவாழ்
நலனுறற் கருந்தவ மலசகி தர்க்கே
யமையுமஃ தின்றி யிமையா தாகலி
னுமையினை இடப்பாங் குறற்கருந் தவமிம்
மாகதா சலத்திடை வந்திருந் தாற்றிப்
பெற்றன ளென்ப மற்றவ ளபின்னையாய்
நிற்பிரி வில்லாச் சிற்சொரூ பிணியே
யாகவும் பின்னைபோன் றருந்தவம் புரிந்த
துலகெலா மெவ்வித நலனெலாம் வேண்டினு
மினிதரு டலைமைத் தனிமுதற் பரமனீ
யேயெனும் வாய்மை நேயமுற் றுணரவும்
வேண்டுவார் வேண்டுவ வீண்டுபெற் றின்புற
லாண்டிரண் டற்றுவாழ் மாண்டகு பேரின்

---

* ஏணி—மான்கன்று.

புறவினைக் குரியது நிறைசிவ தீக்கை
முறைபுரி பூசனைத் திறனுற வியற்று
மருந்தவச் செயலே யாகு மென்றெனி
னாரவும் புரியருட் குணமலால் வேறென்
னிம்முறை நீயுந் தென்முகக் கணுய்த்
தெளித்தருள் செய்தனை இளக்கரு மிதனையே
காண்பா ராசெனு மாண்பார் தருதிருச்
செந்தமிழ்ச் சுருதி யுந்தெளித் திலக்கிற்
றிவையெலா முணர்ந்துநின் னவையுறு சேவடிக்
கன்பொரு சிறிது மென்புடை மேனில
தென்செய் கோவெலி யன்செயல் யாதுமின்
றதலி னீயே யனைத்தருள் செயினலான்
மேதக வருடுனை வேறெனக் கின்றே
லெரிவின்மார் சாரத் துறுகுண மிகவெனி ற
பிறிவிலா வியற்கைப் பேரறி வாதிய
வெண்குணப் பெருந்தகாய் நன்குணத் தாரடிச
சேர்வின் மெய்பெறக்கருள் வாயென வெளியே
னுறுவ தெவன்பால் போகைநின் னடியே
யிறைமுன் னாடுமை மென்ற மிழ்முறை யிதெது
முறையு மோர்ந்துளாய் முதற்குறை வில்லே
னடைக்கல நினக்கே யடைக்கல மல்லே
னன்றுறு லடைக்கல மயமே யடைக்கலம்
பண்ணுமொழி மடமாத ரம்மி பாகத்
தொருவா வடைக்கல மொருவா வின்ப

பெருவாழ் வுறுமா பேதையேற் கருளுதி
வளரொளி மரகத மலையென வழுத்து
மளவில்சீ ரிங்கோ யம்பொது லயத்திற்
பச்சொளி யிலிங்கப் படிவனாய்
முச்சகந் தொழவீற் றிருந்தருண் முதலே. (௨௫)

முதலைவாய் நாரியர்மான் மூழ்கியிந்நாள் காறும்
விதலையுற்றேன் போதுமினி மேற்பொன்—மதலைமதிச்
செஞ்சடையீங் கோய்வாழ் சிவனேநா யேன்புலன்க
ளஞ்சடையீங் கோய்வா னருள். (௨௬)

அருளா கரன்குக னெங்குரு வெங்குரு வண்ணலரும்
பொருளார் பதிகநக் கீரர்வெண் பாமுதற் போற்றுகந்த
பெருமான் மரகத வோங்கற் பரமன் பிரசமலர்
மருவார் திருவடிநாயேன் றலையுறவைப்பதென்றே (௨௭)

## கடம்பந்துறை.

வையமிவ் வையமா வைகென வைத்துவா
னுய்யமற் றங்கமா வுவந்தநி லிவர்ந்துநீ
யப்புர மிடுவெனச் செப்பிடச் சென்றுமத்
தலைவர் மூவருக் கலைவில்பே ரருளை
புரிந்ததென் பரம விரிந்தநின் கருணைச்
செயல்வகை யினைத்தென வியவுளர் தமக்கு
நுனித்துணர் திறத்ததன் றெனத்தெளித் திடற்கோ
தெவ்வினைக் கோலமுந் திவ்விய வாசருட்
பௌவமே தருமெனுஞ் செவ்வியோர்த் திடற்கோ

தெம்மலி தருமந் கம்மெலாங் கொண்டுநீ
யம்மலி கருவியொன் றும்மவ னுய்த்திடா
தசித்தனை வரையு நசித்திடப் புரிந்தது
நினைப்புமாத் திரையே யனைத்தையு மியற்றுந்
தனிப்பெரு வீரத் தினைத்தெளித் திடற்கோ
நிகமா கமத்தலைச் சுகமா வீற்றிருந்
தருள்பெருஞ் சைவத் திருநெறி யுறுதற்
கமைத்தசோ பானமே யாயவே னையநெறி
நின்றவர் மேன்மேற் சென்றுறன் முறையலாற்
சிவரா சாங்கத் தவிர்தனி யரசா
யெங்கெறி களுக்குமேற் செங்நெறிச் சைவ
நன்னெறி நின்றவர் மன்னதன் கீழ்ப்புகி
லங்நெறி நின்ற நன்னரு மிழுந்து
கெடுவரென் பதுதேற் றிடுவது குறித்தோ
வின்ன தின்னவா றியற்றுவை நீயென
வென்னரு முணர்வரி தின்னருஞ் செயலே
யெச்செயல் செயினுநீ யச்செயல் யாவு
மாரருட் செயலெனுஞ் சீருணர்த் திடற்கே
யாற்றரு நின்மறம் போற்றியென் றேத்தினர்
சிற்றம் பலவநின் சீட்டுறப் பெற்றருள்
கொற்றங் குடிவாழ் குருசிகா மணிமுதல்
தெவ்வெனப் போந்து முய்வரு ளுனைப்போற்
றன்னத தன்றுணை யைந்தருக் குண்டெனு
முந்துறை செய்பியாக் குந்தியொப் பனையுடன்

றுனறும்போக மேகால நன்றுகொண டேகிபு
மிருதிருக் குமாரரு திருவருள் புரிநதாட
கொண்டஃ திலங்க மண்டுபே ராகுவுஞ்
சிகண்டிசே வலுமுள் ஞகநதவா கனங்கொடி
யாக்கொண் டருளே யாகுமெச செயலுமென
றோர்க்கு நூல்வாய்மை யுணர்த்தின ரனைய
விருவரு நீயு முருவபே தம்மலாற
சொரூபமொன் றேயெனுந் துணிபுசெயசெயவினுந
தேற்றமே யாகலின் வீற்றுவீற் றிலங்குமம்
மூர்த்திசந் நிதியெலா மூர்த்திமான் சொரூபமே
பார்த்துநின் றுனைவழி பாடுசெய் நாயேற்
கின்னருள் புரிந்துட னேன்றுகொண் டருளுதி
யதுபெறற் குரிமைபெற் றதுபொழு தின்றெனிற
கதுமென யான்புரி முதுபெரும் பாதக
மொன்றொன் று நோக்கி யொறுக்குதி யுன்னை
யன்றியோர் சரணிலை யகில சரண்ணிய
மாகா தற் றிரு வடியுகொண் டுற்ற
வாகீ சத் திரு வடிகள்வாய் மலர்நதரு
ளிய சிவமண மோகினி தென்றுங்
கமழ்திருப் பதிகத் தமிழ்மு தொழுக
வனை திருப் புயதத நனைமதுப பிலிற றுங
கடம்பந் துறைவாழ கண்ணுதால் கொனறை
வடப்பந் திக்கு மதிநதி நிவணிய
விருபாத நீதாதி பொன்பறப வாறுதற

றெழிற்கு முறழ்கயல் விழிப்பெருந் தேவி
வலனிறை தருணமங் கலமணி கந்தரி
யருளா றதொழுதுந் தெருணிறை மதிமுகத்
தமுதொடு தேன்கண் டாதிசே ரின்சொற்
குமுதச் செவ்வாய்க் கோலவளை செங்கை
முற்றிலா முலையுமை யுற்றுவீற் றிருந்தரு
ளிடப்பா கத்தெம் பிறைவ
நடப்பா தச்செந் நளினநா யகனே. (௪௮)

## இரத்தினகிரி.

நாதாவா ஸீசமணி நான்மறைவ டித்தெடுத்த
போதானந் தப்பதிகப் புத்தமிர்தார்—காதா
மணியசல *சேகரீ வாழ்கெனவோர் சொல்லெண்
குணியசல சேகரீ கூறு. (௪௯)

## ஈங்கோய்.

கூற்றங் குமைத்த குரைகழற் றுயனைக் கோமுதலை
யேற்றம் பதாகைய னீங்கோ யிறைவ னெனக்களித்தி
சீற்றங் கொளுங்கூற் றனைய னுகாத திறமுறுபா
தேற்றம் புரிந்துன்னடிக்கண் புனைகருந் திருவருளே (௫௦)

புத்தலாக்கப்பா கோயில் பொன்மணி யசல மீங்கோய்
முத்தலம் வாழி முற்றி லாமுலை முதலா மும்மைச்
சத்திகள் வாழி யன்ன சத்தர்கள் வாழி யன்பர்
மெய்த்தவ நீறு கண்டி மேன்மைகளையந் தெழுத்தும் வாழி

---

* சே-இடம்.

முத்தலநாயக மும்மணிக்கோவை
முற்றுப்பெற்றது.

உ

கணபதி துணை.

# திருவீங்கோய்நாதர் பதிகம்.

திருவளரு மீங்கோய்வாழ் சிவனேமெய் யறிவின்பன்
னுருவெனல்சோ மாக்கந்த முணர்த்தாங்குன் மரகதவெற்
பாதனவெற் பிடத்துவலத் தலைநாப்பட் கடம்பர்தளி
மருவவமர் திறந்தலத்தும் வயக்குதிரு வருண்மாண்போ (௧)

பிறவிதொறுஞ் சென்றுலைந்து பெயராது வருந்துவதென்
மறவினையின் வலியெனினும் வள்ளானின் னீறுமணி
குறைவிலெழுத்தைந்துமுறைகொண்டியலென் வினைவலிக்கோ
ரறைகொடுத்துன்னறைகழலின்பருளுதியீங்கோயண்ணால் (௨)

வினைவலிநின் னருள்வலியின் மிக்குளதோ துக்கமுற்றாழ்ந்
தினையுமெனை யெடுத்தருளு மிரக்கமின்றோ கண்மணியே
யுனையிரக்க முதலென்ப துணர்த்துமே யீங்கோயி
லனைமரக தாம்பிகைபா லண்ணுண்முக் கட்கரும்பே. (௩)

ஈங்கோயின் மாமலைவா ழெந்தாய்நின் னடைக்கலம்யான்
ஈங்கோய்வின் றினைந்தலையில் வேழையிட ரிரித்தருள்வாய்
தேங்கோதை மரகதத்தாய் திருப்பாகா விதழியளித்
தேங்கோதை வேணியனே திகழ்த்துருவின் மரகதமே. (௪)

மரகதமா மலைக்கொழுந்தாய் வளர்ந்துலகெ லாந்தேற்றும்
வரதமர கதவல்லி மணவாள விமாசலைநின்
னுருமுழுதுங் கவர்ந்தனளே யோநினது சிவலிங்கத்
திருவுருவ மரகதமே திகழ்தரவீற் றிருப்பதென்னே. (௫)

சேயவெலாந் தாயரிடஞ் சென்றெளிதிற் றந்துறைசொற்
றூயபயன் கோடலுல காசாரனை யாதலினின்
றூயசிவ லிங்கவுருத் தூமரமா கதமாயீங்
கோயமர்ந்தி யோங்கினருள் கூறுவதென் குணக்குன்றே. (௬)

காலையினிற் கடப்பர்தவிக் கண்ணுதலைப் பணிந்துச்சி
வேலையிரத் தினகிரியின் விழைந்திறைஞ்சிக் குறமுனிபின்
மாலையினிற் றொழுக்கதய மறைத்தலினீ யாய்வணங்கற்
பாலையெனு மீங்கோயெம் பரனருள் பகர்வெளிதோ (௭)

என்செய்கே னென்றுபுறத் திறைஞ்சுகுறு முனிக்கருளி
நின்செய்கை யிதுவாகி னீகொண்ட வுருமாறி
நன்செய்ந்தி படிந்தீயாய் நண்ணிவணங் கென்றருளு
முன்செய்கை யீங்கோயி லுமாபதியீங் குரைப்பெளிதோ. (௮)

சத்திசிவ மிரண்டுருவச் சார்பினிறம் வேறுயும்
புத்தலர்மா மணம்போலப் பொருளொன்றே யென்னேனோர்க்கே
வித்திடவே யாகதத்தாய் மேனியுநின் மேனியுமோர்
சுத்தமர கதவொளியே யுலக்கிணையீங் கோய்ச்சுடரே. (௯)

நீறுமணி யைந்தெழுத்து நேசசிவ பூசைமுதற்
கூறுநிய மங்கண்முறை கொண்டிளமை தொடுத்திந்நாள்
காறுநின தருள்விழைந்தேன் கையனெனு முய்யுநிலை
வேறிலையீங் கோய்விமல வினைதபுத்திங் கெனையருளாய் (௧௦)

அறிவொழுக்க நிறைகல்வி யாதியிலேன் பாதகன்யான்
கறையொழித்த பெரியர்செயல் கண்டெனுநின் பூசாதி
முறையியற்று மெனக்கவையம் மூதியர்செய லாயமுற்றக்
குறைவகற்றி யருளாயீங் கோயமரெம் பெருமானே. (௧௧)

திருவீங்கோய்நாதர் பதிகம்

முற்றுப்பெற்றது.

உ

# பிழை திருத்தம்.

## முத்தலநாயக மும்மணிக் கோவை.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 15 | 10 | 20 | மோக்க | மோக்கமுந் |
| 17 | ” | 22 | பிற்பிறனெ | பிற்பெறன |
| 23 | 16 | 6 | தூஞெறறனு | துஞெற்றனு |
| 24 | ,, | 8 | மோசகதீயன் | மோசகனீயன் |
| 27 | 19 | 11 | மூற்றிலா | முற்றிலா |

## திருவீங்கோய் நாதர்பதிகம்.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 2 | 9 | 2 | பென்னேரோர் | பெணனேரோர் |